# ஒற்றுமைப்பாட்டு

பாரதிதாசன்



# பாரதிதாசன்

- இயற்பெயர் - சுப்புரத்தினம்
- பெற்றோர் - கனகசபைமுதலியார்
- இலக்குமி அம்மையார்
- *29.4.1891* - *21.4.1964* (புதுவை)
- மனைவி - பழநி அம்மையார்
- *29.7.1946* -அறிஞர் அண்ணா புரட்சிக்கவி
- *1970* -சாகித்திய அகாடமி (பிசிராந்தையார்)




# ஒற்றுமைப்பாட்டு

- மக்கள் நலத்துக்கு மதமா? அன்றி
- மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்!(மக்கள்)
- திக்கெட்டும் உள்ளவர் யாரும்-ஒன்று
- சேராது செய்வதே மதமாகும் ஆனால்
- பொய்க்கட்டு நீக்குதல் வேண்டும் -அப்
- பொல்லாங்கில் எல்லாரும் நீங்குதல் வேண்டும்



# எல்லாரும் ஒரு தாயின் செல்வர்

- அக்கட்சி எம்மதத்தாரும் - இங்கு
- (எ)கெல்லாம் உறவினர் என்றெண்ண வேண்டும் (மக்கள்)
- எல்லா மதங்களும் ஒன்றே –அவை
- துன்புற்று வாழ்ந்திடச் சொல்லியதும் உண்டோ
- எல்லோரும் மக்களே யாவர்-இங்(கு)
- (எ)கெல்லாரும் நிகராவர் எல்லாரும் உறவோர்
- எல்லாரும் ஒரு தாயின் செல்வர்-இதை
- எண்ணாத மக்களை மாக்களென் போமே (மக்கள்)



# வழிகாட்டி

- வழிகாட்டும் மதமெல்லாம் இங்கே-நல் வழிகாட்டி யான பின் வழிகாட்டிடாமல்
- பழிகூட்ட வைத்திருப்பீரோ?-நீர்
- பகைகூட்ட மதமென்ற மொழி கூட்டலாமோ?
- பிழியாக் கரும்பினிற் சாற்றை –நீர்
- பெற்றபின் சக்கையை மக்களிடத்தே
- அழிவைப் புரிந்திடுதல் நன்றோ? –நல்
- அன்பால் வளர்த்திடுக இன்ப நல்வாழ்வை (மக்கள்)

